## மின்சார சட்டத்திருத்தங்களுக்கு எதிராக நாடு தழுவிய வேலை நிறுத்தம்

–

மத்திய அரசு நாட்டு மக்கள் அனைவருக்கும் தடையில்லாத தரமான மின்சக்தி அளிப்பதை தன்னுடைய கொள்கை முடிவாக அறிவித்து, இந்த நோக்கத்தை அடைய மின் துறையில் பல மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. இதற்காக 2003ல் நிறைவேற்றப்பட்ட மின்சார சட்டத்திற்கு திருத்தங்கள் தற்போது செய்யப்படுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கான முன்வரைவு, மின்சார (திருத்த) சட்டம் 2014, நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டு, நாடாளுமன்ற நிலைக்குழு அறிக்கையைத் தொடர்ந்து எதிர்வரும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென தெரிகிறது.

மின்சார (திருத்த) சட்டம் 2014, மாநில மின்வாரியங்களின் நிதிநிலையை மிகமோசமாக பாதித்து நலிவடையச்செய்யும். இதனால் மின்சாரத் தொழிலாளர்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். **“இந்தியாவில் மின்துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அடங்கிய தேசிய ஒருங்கிணைப்புக்குழு ஜுன் 25ம் தேதி, புதுடில்லியில் கூடி இது தொடர்பாக சில முடிவுகளை எடுத்துள்ளது”.** அதன் அடிப்படையில் பிரதமர், அமைச்சர்கள், மின்சார வாரிய தலைவர்கள் ஆகியவர்களுக்கு சட்ட திருத்தங்களை கைவிடக்கோரி, மனு அனுப்புவதெனவும், **“நாடெங்கும் பொறியாளர்கள் – தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திட கூட்டங்கள் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது”.** சட்டத்திருத்த முன்வரைவு திரும்பப் பெறப்படவில்லையெனில், **“நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்த முன்வரைவு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் தினத்தன்று இந்தியா முழுவதிலும் மின்துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அனைவரும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதென முடிவெடுத்துள்ளார்கள்”.**

இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான தொழிலாளர்கள், பொறியாளர்களின் தொழிற் சங்கங்கள் தேசீய ஒருங்கிணைப்புக்குழுவில் இடம் பெற்றுள்ளார்கள்.

**பிரதமருக்கு அனுப்பியுள்ள மனுவில் உள்ள முக்கிய கோரிக்கைகள்:**

- இந்தியாவில் இன்னும் 30 கோடி மக்கள் மின்வசதியின்றி இருக்கிறார்கள். மின்சாரச் சட்டம் 2003 நிறைவேறி செயல்பாட்டுக்கு வந்தும் 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் மக்களுக்கு பயன்கள் சென்றடையவில்லை. மின் கட்டணம் பல மடங்கு உயர்ந்துள்ளது.
- சுதந்திரமடைந்த பின் 40 ஆண்டுகளில் ரூ.26,000 கோடி நிதி இழப்பில் இருப்பதாக கூறி, ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்த மின்சார வாரியங்கள் தனித்தனியான கம்பெனிகளாக பிரிக்கப்பட்டன. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் மின்விநியோக நிறுவனங்களின் இழப்பு ரூ.3,00,000 கோடியை விட அதிகமாகி உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. **“மின்வாரியங்களை பிரித்ததனால் பலன் ஏதுமில்லை”.** ஒருங்கிணைந்த அமைப்பாக செயல்படும் கேரள மாநில மின்சார வாரியம் இந்தியாவில் சிறப்பாக செயல்படுகிறது என உலக வங்கி அறிக்கை தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் தேவையைவிட ஒரு இலட்சம் மெ.வா. அதிக உற்பத்தித்திறன் இருக்கிறது. இருந்த போதிலும் 8–10% உச்சக்கட்ட பற்றாக்குறை இருக்கிறது. பல்வேறு காரணங்களால், 40,000 மெ.வா. திறனுள்ள தனியார் மின்உற்பத்தி நிறுவனங்கள் செயல்படாமல் இருக்கின்றன. *இயற்கை வளங்கள், காற்றாலை, சூரியஒளி மின்சக்தி ஆகியவை தனியாருக்கு அளிக்கப்படுகின்றன.*
- **“மின்விநியோகத்தை மின்பாதைகள், மின்சக்தி அளிப்பு என இரண்டாகப் பிரிக்க சட்ட திருத்தம் வகை செய்கிறது. விநியோகக் கட்டமைப்பில் எந்த விதமான முதலீடும் செய்யாமல், தனியார்கள் நுழைவிற்கு சட்டத்திருத்தம் வழி செய்கிறது”.** இதனால் வசதி படைத்த பயனீட்டாளர்களுக்கு மட்டும் தனியார் நிறுவனங்கள் சேவை செய்யும், வருவாய் குறைந்த நிலையில், ஏழை, இலவச பயனீட்டாளர்களுக்கு மின்சக்தி அளிக்கும் சுமை அரசுத்துறை நிறுவனங்களுக்கு வந்து சேரும். இதனால் அரசு நிறுவனங்கள் பெருத்த நஷ்டம் அடையும்.
- **“தமிழகம் உள்ளிட்ட பெரும்பாலான மாநில அரசுகள், மின்பாதை – மின்சக்தி அளிப்பு பிரிக்கப்படுவதை எதிர்க்கின்றன”.** ஆனால் நாடாளுமன்ற நிலைக்குழு, மாநில அரசுகள் இந்தத் திருத்தத்தை ஆதரிப்பதாக குறிப்பிட்டுள்ளது. **“தொழிலதிபர்கள் அடங்கிய குழுக்களோடு மட்டுமே நாடாளுமன்ற நிலைக்குழு ஆலோசனை செய்துள்ளது. தொழிலாளர், பொறியாளர்கள் பிரதிநிதிகளின் கருத்தை நிலைக்குழு கேட்கவில்லை”.**
- குறைந்தபட்ச பாதுகாப்போடு 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களின் நிலை குறித்து, அரசு கவலை ஏதும் கொண்டிராமல், சட்டத் திருத்தங்களை கொண்டு வந்துள்ளது.
- **“ஏழை மக்களை மோசமாக பாதிக்கும், இந்தச் சட்டத் திருத்தங்களை திரும்பப் பெறாவிட்டால், இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் – பொறியாளர்கள் பெருமளவில் உறுப்பினராக உள்ள அமைப்புகள் நாடாளுமன்றத்தில் சட்ட முன்வரைவு விவாதத்திற்கு வரும் நாளன்று, ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வார்கள்”.**

தொகுப்பு : **சா.கண்ணன்**